ET/SSS/2022(2023)/OL/22/T/Q/S-3

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

G. C. E. Ordinary Level | **අ. පො. ස. සාමාන්‍ය පෙළ** | 2022 (2023)

# Student Seminar Series

## ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව

Practice Paper | **උපකාරක ප්‍රශ්න පත්‍ර**

# Tamil Language & Literature

# தமிழ் மொழியும் இலக்கியமும்



**Question Paper - I,II,III** | வினாப்பத்திரம் - **I,II,III** (மொழிமூலம்-தமிழ்)

Nenasa

The National e-learning Portal for The General Education

தொலைக்கல்வி மேம்பாட்டு பிரிவு | தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு

දුරස්ථ අධ්‍යාපන ප්‍රවර්ධන ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
**Ministry of Education, Sri Lanka**

| 22 | T | I |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - උපකාරක සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- உதவிக் கருத்தரங்கு தொடர் - 2022 (2023)
**G. C. E. Ordinary Level Examination - Support Seminar Series - 2022 (2023)**

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය I
தமிழ் மொழியும் இலக்கியமும் I
**Tamil Language and Literature I**

පැය තුනයි.
மூன்று மணித்தியாலம்
Three Hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි.
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**தமிழ் மொழியும் இலக்கியமும் I**

கவனிக்க
- எல்லா வினாக்களுக்கும் விடையெழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடைக்குரிய இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

01. “யானை அணையவர் நண்பொரீஇ..” இங்கு **ஒரீஇ** என்பதன் பொருள்,
1) தழுவி 2) நீக்கி 3) ஒத்து 4) உருகி

02. “வழியும் பொதிகை வரையினில் கால் கொண்டு...” என்பதில் **கால்** என்பது,
1) தென்றல் 2) மலை 3) அருவி 4) பாதம்

03. ‘‘கதியிழக்கினும் கட்டுரை இழக்கிலோம்..” இங்கு **கட்டுரை** என்பதன் எதிர்ப்பதம்,
1) மெய் 2) பொய் 3) உண்மை 4) கீர்த்தி

04. “...அவவின் முகம் வாடிப் போயிருந்தது..” இங்கு **வாட்டம்** என்பதன் எதிர்க்கருத்து,
1) களைப்பு 2) தளர்வு 3) சோர்வு 4) உற்சாகம்

05. “குப்பை மேட்டில் ஏறி நின்று உமணர்கள்..” இங்கு **உமணர்கள்** என்போர்,
1) உப்பு விற்பவர் 2) மலைவாசிகள் 3) பூ விற்பவர் 4) குதிரை ஓட்டுபவர்

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06. பொருளால் வேறுபட்ட சொற்களின் இணைப்பு,
1) அடிசில், உண்டி, அன்னம் 2) அப்பு, சலம், கனல்
3) குவலயம், வையம், பூமி 4) வெய்யோன், பரிதி, ஆதவன்

07. வேறுபட்ட சொற்கள்,
1) இழை, பனுவல், நூல் 2) அடவி, ஆரணியம், விசும்பு
3) சீற்றம், கோபம், முனிதல் 4) வனப்பு, கவின், அணி

08. சினை, கோடு, கொம்பு ஆகிய சொற்கள் குறிக்கும் பொருள்,
1) துறை 2) முட்டை 3) தந்தம் 4) கிளை

09. மாணவர் வகுப்பறையை அதிபர் 'மொனிட்டரிங்' (Monitoring) செய்தார். இங்கு **Monitoring** என்பதன் தமிழ் வடிவம்.
1) மதிப்பிடுதல் 2) அவதானித்தல் 3) கண்காணித்தல் 4) பரிசோதித்தல்

10. 'கன்று' எனும் இளமைப் பெயருள் **அடங்காதது**,
1) தென்னை 2) எலுமிச்சை 3) எருமை 4) புகையிலை

11. ''தனித்து நின்றும் சத்தியத்தால் தலை நிமிரும் மனிதன்'' - இங்கு **தலை நிமிர்தல்** என்ற மரபுத்தொடர் தரும் பொருள்.
1) தலையை நிமிர்தல் 2) நிலை மேம்படுத்தல்
3) தலையை உயர்த்திப் பார்த்தல் 4) பெருமிதம் கொள்ளல்

12. 'இருபக்கமும் துன்பம்' என்ற பொருளில் அமைந்த மரபுத்தொடர்,
1) இலைமறை காய் 2) அரைப்படிப்பு
3) இருதலைக் கொள்ளி 4) எடுப்பார் கைப்பிள்ளை

13. எல்லா இடங்களிலும் அவருடைய புகழ் பரவியது என்ற கருத்தைத் தரும் அருஞ்சொற்றொடர்,
1) பட்டி தொட்டியெங்கும் 2) மாடமாளிகை கூடகோபுரம்
3) ஆண்டி முதல் அரசன் வரை 4) ஒல்காப் பெரும்புகழ்

14. வடவை என்ற பெண் மரபைக் கொண்டமைவது,
1) யானை 2) குதிரை 3) நண்டு 4) மான்

15. ''ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்க வேண்டும்'' - என்ற பழமொழியின் கருத்து,
1) உணவுக்காகக் காத்திருக்க வேண்டும் 2) பொறுமையே பெருமை
3) ஆறும் வரை பொறுமை வேண்டும் 4) தக்கத் தருணத்திற்காக காத்திருத்தல்

16. ஒன்றினுடைய முக்கியத்துவத்தை எடுத்துணர்த்தும் பழமொழி,
1) அடியாத மாடு படியாது
2) அச்சாணியில்லா தேர் முச்சாணும் ஓடாது
3) அன்னைக்கு உதவாதவன் யாருக்கும் உதவான்
4) அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்

17. ஒத்த பொருள் தரும் இணைமொழி,
1) இன்னார் இனியார் 2) ஏற்றம் இறக்கம் 3) சந்து பொந்து 4) வகை தொகை

18. 'குடத்துள் விளக்கு போல' - எனும் உவமைத்தொடரின் கருத்து,
1) குறைந்த ஒளியுள்ள விளக்கு 2) தனக்கு மட்டுமாக வாழ்தல்
3) வெட்ட வெளிச்சமாகத் தெரிதல் 4) வெளியுலகிற்குத் தெரியாமல் இருத்தல்

19. ''சூய் சூய் எனக் குரல் கொடுத்தா.'' - எனும் தொடரில் **சூய் சூய்** என்பது,
1) அடுக்குத்தொடர் 2) இரட்டைக்கிளவி 3) அடுக்கிடுக்குத்தொடர் 4) இணைமொழி

20. ஆத்திரத்தோடு நண்பர் அவுக்கென எழும்பி, இரண்டில் ஒன்று பார்ப்பதென பாய்ந்து வந்தார். இங்கு இடம்பெற்ற விரைவை உணர்த்தும் ஒலிக்குறிப்புச்சொல்,
1) பாய்ந்து 2) எழும்பி 3) அவுக்கென 4) ஆத்திரத்தோடு

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21. மகன் கண்களை விரித்து என்னைப் பார்த்தான். அவனுடைய கை மௌசைப் பிடித்திருந்தது. இங்கு இடம்பெற்றுள்ள மாற்றுப்பெயர்.
1) மகன் 2) கண் 3) அவன் 4) கை

22. பின்வருவனவற்றுள் இடைச்சொல்லைப் பகுதியாக கொண்டமைந்தது,
1) வந்தான் 2) போன்றான் 3) மாண்டான் 4) சித்திரித்தான்

23. வேற்றுநிலை மெய்ம்மயக்கம் இடம்பெற்ற சொல்,
1) பெட்டி 2) கொக்கு 3) அப்பா 4) வந்து

24. கூட்டுப்பெயரடையாக அமைவது,
1) வேகமாக 2) சுவையுள்ள 3) நேற்று 4) சிவந்து

25. முதியோர் இல்லம் என்பது எத்தனையாம் வேற்றுமைத்தொகை,
1) ஐந்தாம் வேற்றுமைத்தொகை 2) நான்காம் வேற்றுமைத்தொகை
3) இரண்டாம் வேற்றுமைத்தொகை 4) மூன்றாம் வேற்றுமைத்தொகை

26. 'கல்வியிற் பெரியன் கம்பன்' இத்தொடரில் இடம்பெற்றுள்ள வேற்றுமைப் பொருள்,
1) நீங்கல் 2) எல்லை 3) ஒப்பு 4) ஏது

27. "..மூன்றுலகும் ஈன்றானை முன்னீன்றான்.." இங்கு ஈன்றானை என்பது,
1) தொழிற்பெயர் 2) வினையாலணையும் பெயர்
3) ஆக்கப்பெயர் 4) கூட்டுப்பெயர்

28. மதன் கடிமனை சென்றடைந்தான். இங்கு **கடி** எனும் உரிச்சொல் உணர்த்தும் பொருள்,
1) வாசனை 2) பெரிய 3) காவல் 4) கூர்மை

- **பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியைத் தெரிவு செய்க.**

29. 1) இடுகுறி :- மரம், புறா, மலை
2) காரணம் :- பறவை, மண்வெட்டி, மீன்கொத்தி
3) காரணஇடுகுறிப் பெயர் :- முக்கண்ணன், முள்ளி, அந்தணன்
4) பொதுப்பெயர் :- விவேகி, மேதை, ஆசிரியர்

30. 1) பெயர்ச்சொல் :- மேசை, மரம், வேர்
2) வினைச்சொல் :- வா, போ, நடை
3) இடைச்சொல் :- இனி, மற்று, பிற
4) உரிச்சொல் :- சால, உறு, தவ

- **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. அத்தியாவசிய பொருட்களுக்கான புதிய விலை ..............................அறிவிக்கப்பட்டது.
1) சுட்டி 2) நிர்ணயம் 3) சுட்டெண் 4) அளவீடு

32. பாடசாலையினுடைய அறுபதாவது ஆண்டு …………….. வெகு கோலாகலமாக கொண்டாடப்பட்டது.
1) பவள விழா 2) பொன்விழா 3) மணிவிழா 4) அமுதவிழா

33. பிரதேச தவிசாளர் …………. மன்ற உறுப்பினர்களோடு கலந்துரையாடினார்.
1) உள்ளூராட்சி 2) செயலகம் 3) விளையாட்டு 4) கலாசாரம்

34. கண்காட்சிக்கு வைக்கப்பட்ட பொருட்கூட்டம் பார்வையாளர்களால் சிறிதும் ……………………
1) வரவேற்கப்பட்டது 2) வரவேற்கப்பட்டன
3) வரவேற்கப்படவில்லை 4) வரவேற்கப்படும்

- **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

35. கணவனும் மனைவியும் சில பண்புகளில் ஒருவரையொருவர்.........................................
1) ஒத்திருக்கின்றனர் 2) ஒத்திருக்கின்றீர்
3) ஒத்திருக்கின்றோம் 4) ஒத்திருக்கின்றீர்கள்

36. மொழி தினப்போட்டியில் வெற்றி பெற்ற ஒவ்வொரு மாணவருக்கும் சான்றிதழ்கள் ..................
1) வழங்கப்பட்டது 2) வழங்கப்பட்டன 3) வழங்கியது 4) வழங்கும்

- **கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

வெள்ளம் போல் தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம்: அன்னார்
உள்ளத்தால் ஒருவரே மற்
றுடலினால் பலராய் காண்பார்:
கள்ளத்தால் நெடுங் கொணாதே
என வையம் கலங்கக் கண்டு
துள்ளும் நாள் எந்நாள்? உள்ளம்
சொக்கும் நாள் எந்த நாளோ?

37. “உள்ளத்தால் ஒருவரே மற்றுடலினால் பலராய்க் காண்பார்..” என்பதனூடாக விளங்கிக் கொள்வது,
1) தமிழர்கள் உள்ளத்தால் ஒன்றுபட்டவர்கள் உடலால் மட்டுமே வேறுபட்டவர்கள்.
2) தமிழர்கள் உள்ளத்தாலும் உடலாலும் ஒன்றுபட்டவர்கள்.
3) தமிழர்கள் உள்ளத்தால் ஒன்றுபட்டு, உடலால் வேறுபட்டவர்கள்.
4) தமிழர்கள் உள்ளத்தாலும் உடலாலும் வேறுபட்டவர்கள்.

38. “வெள்ளம் போல் தமிழர் கூட்டம்” - இதில் இடம்பெற்றுள்ள உவமானம்,
1) தமிழர் 2) போல் 3) கூட்டம் 4) வெள்ளம்

39. ‘வையம் கலங்கக் கண்டு’ என்ற தொடரில் **வையம்** என்ற சொல்லால் உணர்த்தப்படுவது,
1) மக்கள் 2) உலகம் 3) உள்ளம் 4) நாள்

40. **கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால், கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

அ) விலங்குகள், பறவைகள் என மனிதரல்லாதவைகளும் மனிதர்க்குக் கற்றுக் கொடுக்கின்றன.
ஆ) உலகம் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளை மனிதனுக்கு வழங்குகின்றது.
இ) அதற்கமையவே தமது வாழ்வை நெறிப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவையுள்ளது.
ஈ) மனிதப் பண்பெனும் உயர் மாண்பே மனிதன் கற்றுணர்ந்ததில் தலைசிறந்ததாகும்.
உ) மனிதரிடத்திலிருந்து பல்வேறு பண்புகளை மனிதன் கற்றுக்கொள்கின்றான்.

1) ஆ, உ, அ, ஈ, இ 2) ஆ, உ, அ, இ, ஈ
3) அ, ஈ, உ, அ, இ 4) இ, ஈ, உ, அ, ஆ

*****

දුරස්ථ අධ්‍යාපන ප්‍රවර්ධන ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

| 22 | T | II |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - උපකාරක සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- உதவிக் கருத்தரங்கு தொடர் - 2022 (2023)
G. C. E. Ordinary Level Examination - Support Seminar Series - 2022 (2023)

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය II
தமிழ் மொழியும் இலக்கியமும் II
Tamil Language and Literature II

தமிழ் மொழியும் இலக்கியமும் II

*கவனிக்க:*
*எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.*
*இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.*

**01) சுருக்கமான விடை எழுதுக.**

1. பின்வரும் தொடரை சந்திப் பிரித்து எழுதுக.
   கண்டே களித்தங் குறவாடி
2. “யாமிரப்பவை பொருளும் பொன்னும் போகமு மல்ல” - இங்கு இடம்பெற்ற எழுவாயைக் குறிப்பிடுக.
3. பின்வரும் பேச்சுவழக்குத் தொடரை, எழுத்து வழக்கில் தருக.
   இப்ப ஏலாமனெ நேரம் பெய்ட்டு.
4. இலக்குமணன் பன்னசாலைக்குச் சென்றான்.
   பரதன் ஆற்றுக்குச் சென்றான்.
   மேற்படி இரண்டு வாக்கியங்களையும் ஓரே வாக்கியமாக்குக.
5. அய்யர் வந்தார். இங்கு இடம்பெற்றுள்ள ‘அய்யர்’ என்பது எவ்வகைப் போலி?
6. பாரதிதாசன் பாரத நாட்டின் பழம் பெருமையைப் புகழ்ந்தும் மூடநம்பிக்கைகளைக் கடிந்தும் பாடவில்லை என்பதனை உடன்பாட்டு வினையாக தருக.
7. பின்வரும் வாக்கியத்தைப் பொருத்தமான நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுக.
   நாம் மக்களிடம் குறிப்பாக ஏழைகளிடம் இரக்கத்துடன் பழக வேண்டும்
8. ‘அளி’ என்பது பெயராகவும் வினையாகவும் வரத்தக்க வகையில் ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.
9. தாழ்குழல் சென்றாள். - இது எவ்வகைத் தொகை?
10. அ. பாடசாலை அதிபரின் உரையைத் தொடர்ந்து மாணவர்களின் இசை, நடன, நாடக நிகழ்ச்சிகள் மேடையேறின.
    ஆ. மாணவர்கள் யாவரும் ஒழுங்காக பாடசாலைக்கு வரவேண்டும். இவ்விரு வாக்கியங்களில் அறிவித்தலாக அமைந்த வாக்கியம் எது?

**(2 X 10 = 20 புள்ளிகள்)**

**02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலைப்பு இடுக.**

(i). இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் பாரிய அச்சுறுத்தலாக கழிவுகள் காணப்படுகின்றன. கழிவுகள் மீள்சுழற்சி, விவசாயம் மற்றும் ஏற்றுமதிக்குப் பயன்படுவதுடன் மனிதனது பொறுப்பற்ற தன்மையால் சூழல் பாதிப்புறுவதற்கும், நோய்கள் பரவுவதற்கும், அனர்த்தங்கள் ஏற்படுவதற்கும் காரணமாகிவிடுகின்றன. கழிவுகள் சூழலுக்கு நன்மையாகவோ அல்லது பாதிப்பாகவோ அமைவது அவற்றை முகாமைத்துவம் செய்வதிலேயே தங்கியுள்ளது. எனவே, கழிவுகளை முறையாக முகாமைத்துவம் செய்தலின் அவசியத்தை வலியுறுத்தி **விளக்கக் கட்டுரை.**

(ii). நவீன அறிவியல் உலகில் மனிதர்கள் தகவல் தொடர்பாடல் திறன்களை வளர்ப்பதன் மூலமாக மாறும் இந்த உலகில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முடிகின்றது. அவ்வகையில் தகவல் தொடர்பாடல் துறையில் சமூக வலைத்தளங்களான இணையம், முகநூல், புலனம், வலையொளி (யூ-டியூப்) என்பன மிக இன்றியமையாதவைகளாக மாறிக்கொண்டு வருகின்றன. இவை, மனிதர்களின் பல்வேறு தேவைப்பாடுகளை நிறைவு செய்கின்ற அதேநேரத்தில், பாதிப்புக்களை ஏற்படுத்தவும் தவறுவதில்லை. எனவே, சமூக வலைத்தளங்கள் நன்மைகளைத் தருகின்றன எனக் கருதும் ஒருவருக்கும், தீமைகளைத் தருகின்றன எனக் கருதும் இன்னொருவருக்கும் இடையிலான **உரையாடல்.**

(iii). குழந்தைகளுக்கான உளவள மருத்துவர் ஒருவரைச் சந்தித்து, குழந்தைகளை வளர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டியவை, அவர்களின் உரிமைகள் மற்றும் தேவைகள், குழந்தைகள் இன்று எதிர்நோக்கும் சவால்கள், மற்றும் அவற்றிலிருந்து மீள்வதற்கான வழிமுறைகள் முதலானவை குறித்து அவரிடம் நீர் கண்ட **நேர்காணல்.**

(iv). சுமதி சிறுவயதிலே தன் தாயை இழந்து தந்தையின் கவனிப்பில் வாழ்ந்து வருகிறாள். தந்தையும் ஒரு கட்டத்தில் சுகயீனமுறவே, தனது கல்வியை தொடர முடியாமல் சுமதி அல்லலுறுகின்றாள். படிப்புடன் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் அதிக ஆர்வத்துடன் ஈடுபடும் அவளின் பாடசாலை வாழ்க்கை இடையில் முடிந்துவிடக் கூடிய சந்தர்ப்பத்தில் பாடசாலையிலிருந்து ஓய்வுபெறும் ஆசிரியையின் துணையுடன் பட்டப்படிப்பையும் முடிக்கின்றாள். இக்கருத்து புலப்படும் வகையில் ஒரு **சிறுகதை**.

**(25 புள்ளிகள்)**

**03.** பின்வரும் உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

''தமிழ் பண்பாட்டு உணவுமுறை கிடைத்ததை சாப்பிடுகின்ற வழக்கம் கொண்டதோ, சுவையின் அடிப்படை மட்டுமே கொண்டதோ அல்ல. காரணம் இல்லாமல் காரியம் இல்லை என்பார்கள் பெரியவர்கள். அதுபோல, நம்முடைய ஒவ்வொரு உணவுப் பழக்கத்தின் பின்னும் அறிவியல் பூர்வமான பல இரகசியங்கள் புதைந்திருக்கின்றன. தமிழர் திருநாள் என்ற தைப்பொங்கலுக்கு எல்லோரும் ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் நேரத்தில், நாம் அனைவரும் அதை தெரிந்துகொள்வதும், மீண்டும் அவற்றைப் பின்பற்றுவதும் நம் ஆரோக்கிய வாழ்க்கைக்குப் பெரிதும் உதவும்'' என்கின்றார் சித்த மருத்துவர் காசிப்பிச்சை. என்னென்ன வழிகளில் அறிவியல் பார்வை நம்மிடம் இருந்தது? பார்ப்போம்.

'காலை உணவு கஞ்சி மட்டுமே' என்கின்ற பழமொழி பண்டைய தமிழ்ச்சமூகத்தில் இருந்தது. புன்செய் நிலங்களில் விளையும் தானியங்களான கம்பு, சாமை, கேழ்வரகு போன்றவற்றில் செய்த கஞ்சி, கூழ் போன்றவையே அன்றைய காலை உணவாக இருந்தது. கேழ்வரகில் செய்த பால், கஞ்சி, கூழ் போன்றவை குழந்தைகளுக்கான உணவாகக் கொடுக்கப்பட்டு வந்தன. இதுபோன்ற திரவ உணவுகளை குறைவாக எடுத்துக் கொண்டாலும், அதன் மூலம் நமது உடலுக்குத் தேவையான சத்துக்களும், ஆற்றலும் நிறைவாகக் கிடைத்தன. குறைவாக சாப்பிடுவதால் உணவு செரித்தலுக்காக வயிற்றுக்கு அனுப்பப்படும் இரத்த ஓட்டம் குறைவாகச் செல்கின்றது. இது கை, கால்கள் போன்ற உடலின் மற்ற உறுப்புக்களின் இயக்கத்துக்கும் தேவையான இரத்த ஓட்டம் சீராகச் செல்வதற்கும் உதவுகிறது. இதன் மூலம் உடல் உழைப்புக்குத் தேவையான ஆற்றலும் நிறைவாகக் கிடைக்கின்றது. தமிழர்கள் பழங்காலத்தில் வரகு, தினை, குதிரை வாலி, சாமை போன்ற சிறு தானியங்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றார்கள். அவர்கள் கேழ்வரகுக்களி, சோளக்களி, கம்புக்களி, வெந்தயக்களி, உளுந்தங்களி போன்ற களி வகைகளை திட உணவாக எடுத்துக்கொண்டார்கள். மேலும் உடல் இளைப்பதற்கு, குழந்தைப் பேறுக்குப் பின் என்று பலவகையான மருத்துவக் குணமுடைய கஞ்சிகளை பயன்படுத்தினார்கள். இதுபோன்ற கஞ்சிகளும், களிகளுமே அவர்களுடைய உடல் ஆரோக்கியத்திற்கும் உடல் வலுவுக்கும் காரணமாக இருந்தன.

**(10 புள்ளிகள்)**

**04.** பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

சாதிப் பிரச்சினை பேசுகின்ற சிலர் பழந்தமிழ் இலக்கியங்களிலே ஆங்காங்கு காணப்படும் சில மனிதாபிமானக் கருத்துக்களைச் சுட்டிக்காட்டி, பெரும் புலவர்கள் எல்லாம் சாதி முறையை எதிர்த்தே வந்திருக்கின்றனர் என்று தமக்குத் தாமே ஒருவகையான மன அமைதியைத் தேடிக்கொள்வதைக் காணலாம். சங்கப் புலவர்களிலிருந்து இராமலிங்கர் வரை சாதி சமய வழக்குகளைக் கண்டித்துப் பாடியவர் பலர் உளர் என்பது உண்மையே. ஆனால் அக்கண்டனத்தின் தன்மையே கூர்ந்து நோக்கத்தக்கது. சாதிமுறை கூடாது என்பதை எடுத்துக் கூறுவதற்குப் பெரும் புலமையோ, பேரறிவோ தேவையில்லை. நிலைமையை மாற்றுவதற்கு ஏற்ற வழிவகைகளைக் கூறுவதிலேயே முந்தையோர் பெரிதும் வேறுபடுகின்றனர்.

''கொடிது கொடிது வறுமை கொடிது'' என்று ஔவைக் கிழவியும் பாடினாள். ஆனால் வறுமை சமுதாய நிதர்சனமாக இருந்து வந்திருக்கிறது. ''இல்லை என்ற சொல்லை உலகில் இல்லை என்று வைப்பேன்'' என்று பாரதி முழங்கிய போது வறுமை வெறும் வருணனையாக அன்றி மாற்றப்பட வேண்டிய பொருளாகக் காட்சி தந்தது. சாதி முறையும் அவ்வாறுதான். மனிதனை மனிதன் அடக்கி அடிமைப்படுத்தும் எல்லா விதமான முயற்சிகளும் பல்வேறு காலங்களில் போராட்டங்களினாலேயே மாற்றப்பட்டுள்ளன என்பது வரலாற்று உண்மை. மனமாற்றத்தால் அடிப்படை மாற்றம் எதுவும் ஏற்படாது. மந்திரத்தால் மாங்காய் விழாதது போல சாதிக் கொடுமையைப் பற்றியும் சாதி முறைமையைப் பற்றியும் எமது பழைய இலக்கியங்களிலே எடுத்தமைத்தவர்கள் ஆகக்கூடிய பட்சம் மனமாற்றத்தையே எதிர்ப்பார்த்தனர். உடையவனும் இல்லானும் இருந்த வணிக வர்க்கச் செல்வாக்கு ஓங்கிய சமுதாய அமைப்பிலே ''வறியார்க்கு ஒன்று ஈவது'' பற்றி விரிவாக எடுத்துரைத்து, 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும்' இயக்க முறையை வகுக்க முயன்றார் வள்ளுவர்.

1. எக்கருத்துக்களை முதன்மையாக வைத்து சாதிப்பிரச்சினையை எதிர்த்தனர்?
2. சாதி சமய வழக்குகளைக் கண்டித்துப் பாடப்பட்ட காலமாக கூறப்படுவது எது?
3. வறுமையை நீக்குதல் என்பதற்கு பாரதி கூறிய கருத்து யாது?
4. சாதிக்கொடுமை, சாதிமுறைமை பற்றி எவ்வகையான உவமைத் தொடரினால் விளக்கப்படுகின்றது?
5. இப்பந்தியினூடாக ஆசிரியர் கூற விழைந்தது யாது?

**(10 புள்ளிகள்)**

**05.** காந்தி நகர் பிரதேசத்தில் உள்ள பெண்களுக்கான விளையாட்டு மன்றம் ஒன்றை உருவாக்கி அவர்களின் திறன்களுக்கு அடையாளத்தைப் பெற்றுத்தர வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்துடன் செயற்பட்டு வரும் பிரதேச தவிசாளர் சு.லலிதா அவர்களுக்கு, நன்றி பாராட்டும் வகையில், பெண்கள் விளையாட்டு மன்றத்தின் தலைவி க.கயல்விழி என உம்மைக் கருதிக் கொண்டு பின்வரும் விடயங்களை உள்ளடக்கி 100 சொற்களில் கடிதம் ஒன்று எழுதுக.

- பெண்கள் விளையாட்டுக்களில் ஈடுபடுதலிலுள்ள சவால்கள்
- பெண்கள் விளையாட்டுக்களினதும் விளையாட்டு மன்றத்தினதும் அவசியம்
- தேவையான வளங்களையும், பயிற்சிகளையும் பெற்றுக் கொடுத்தமை.

**அல்லது**

தொற்று நோய் பரவலைத் தடுப்பதற்காக சாந்திபுரம் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட தடுப்பூசி வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடைப்பெற்ற விடயங்களை உள்ளடக்கி சாந்திபுரம் கிராம சுகாதார உத்தியோகத்தர் ம.தவச்செல்வன் என உம்மைக் கருதிக் கொண்டு பிரதேச செயலாளர் சு.தரணிதரனுக்கு 100 சொற்களில் **அறிக்கை** எழுதுக.

**(15 புள்ளிகள்)**

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

| 22 | T | III |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - උපකාරක සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- உதவிக் கருத்தரங்கு தொடர் - 2022 (2023)
G. C. E. Ordinary Level Examination - Support Seminar Series - 2022 (2023)

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය III
தமிழ் மொழியும் இலக்கியமும் III
Tamil Language and Literature III

தமிழ் மொழியும் இலக்கியமும் III

**கவனிக்க:**

- அறிவுறுத்தலுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- **1, 2, 3, 4** ஆகிய வினாக்களுக்கும் **5, 6, 7** ஆகிய வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1. சுருக்கமான விடை தருக.**

(i) ‘‘தேம்படு பனையின் திரள் பழத்தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்’’

(அ) ‘தேம்படு’ என்பதன் பொருள் யாது?

(ஆ) ‘வானுற’ என்பதனால் நீர் கருதுவது யாது?

(ii) ‘‘ஈர்த்து இன்புறூஉம் இளையோர் போல்
உற்று இன்புறேஎம் ஆயினும்’’

(அ) ‘ஈர்த்து’ என்பதன் பொருளை எழுதுக.

(ஆ) இதில் இடம்பெற்றுள்ள அணி யாது?

(iii) ‘‘சுருட்டுப் புகைப்பார் நான் ஓரத்தில் போய் இருந்து கொள்வேன் வால்வண்டியில் இருப்பது எனக்கு நல்ல குஷி’’

(அ) இவ்வாறு கூறியவர் யார்?

(ஆ) ‘குஷி’ என்பதன் பொருள் யாது?

(iv) ‘‘சூடுகின்ற துழாய் முடியோன் சுரருடனே
முனிவர்களும் சுருதி நான்கும்’’

(அ) துழாய் முடியோன் யார்?

(ஆ) ‘சுரர்’ எனக் குறிப்பிடப்பட்டோர் யார்?

(v) ‘‘ஈமஞ்சேர் மாலை போல இழிந்திடப்பட்ட செயலாகும்.’’

(அ) ‘ஈமம்’ என்பதன் பொருள் யாது?

(ஆ) இங்கு உவமானமாக இடம்பெறுவது யாது?

(vi) ''விலங்கி யற்கை யிலையெனில் யாமெலாம்
விரும்பு மட்டினில் விண்ணுற லாகுமே''
(அ) விண்ணுறத் தடையாக இருப்பது எது?
(ஆ) 'விண்ணுறல்' என்பதனால் குறிப்பிடப்படுவது.

(vii) ''இலங்கைச் சட்டசபையில் ஓரிலங்கைச் சிவப்பாயிருந்து விளங்கினார்.''
(அ) இவ்வாறு விளங்கியவர் யார்?
(ஆ) 'சிவப்பாயிருத்தல்' என்பதன் மூலம் நீர் கருதுவது யாது?

(viii) ''அந்த நதி வரும் நாளில் சீறி ஒலியெழுப்பி ஓடாது
உறையும் சிறு துளியாய்''
(அ) 'நதி' என உருவகிக்கப்பட்டவர் யார்?
(ஆ) அவர் சிறுதுளியாய் உறையக் காரணம் யாது?

(ix) ''செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்
தேனலர் சண்பகவாசம் வானுலகில் வெடிக்கும்''
(அ) 'தேமா' எனக் குறிப்பிடப்படுவது எது?
(ஆ) வானுலகில் வெடிக்கும் என்பதால் நீர் கருதுவது யாது?

(x) ''ஒருமைச் செயல் ஆற்றும் பேதை எழுமையும்
தான்புக்கு அழுந்தும் அளறு''
(அ) **எழுமை** என்றால் என்ன?
(ஆ) 'அழுந்தும் அளறு' என்பதால் கருதப்படுவது யாது?

**(2 X 10 = 20 புள்ளிகள்)**

2. பின்வரும் செய்யுட்பகுதிகளையும் உரைப்பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) பெரிய பரிதாபத்தின் முழு மொத்த வடிவமாய்
என் முன்னே நின்றான்
மீசைக்கு விதை தூவி இளமை மழை பெய்ய
பயிர் முளைத்த பருவம்
ஏதோ அலுவலுக்கு வந்திருந்தான்
கையொப்பம் இடு என்றேன்
இடது கையின் பெருவரலை ஊன்றி
வெட்கிச் சிரித்தான்
அது ஒரு செத்தசிரிப்பு
என் இதயம் கழன்று
அவன் இட்ட
ஒப்பத்தின் மேல் விழுந்து
கத்தியது
பின் கருகிப் பற்றியது

(அ) பையனின் தோற்றம் வருணிக்கப்பட்டுள்ள விதத்தினைத் தருக.
(ஆ) 'என் இதயம் கழன்று அவன் இட்ட ஒப்பத்தின் மேல் விழுந்து கத்தியது' என்பதன் மூலம் கவிஞர் கூறவிழைவது யாது?

(ii) கணக்காய ரில்லாத வூரும் பிணக்கறுக்கு
மூத்தோரை யில்லா வவைக்களனும் - பாத்துண்ணும்
தன்மையிலாள ரயலிருப்பு மிம்மூன்று
நன்மை பயத்த லில.

(அ) ஒருவருக்கு நன்மை தருவன எவையெனக் குறிப்பிடப்பட்டுள்ளன?

(ஆ) 'பிணக்கு' என்றால் என்ன?

(iii) கண்ணை மறைத் தேகொடுபோய்க் காட்டில் விடும் பூனையைப் போற்
பெண்ணை மனையடைத்துப் பின்னொருவர் கைகொடுப்பர்
கண்ணான்முன் கண்டுமிலர் காதலர் சொற் கேட்டுமிலர்
எண்ணாதுமெண்ணி யிருந்தயர்வர் மங்கையர்கள்
இக்கொடுமையைக் கியாதுசெய்வ திசையாய் பசுங்கிளியே

(அ) பெண்களை எவ்வாறு திருமணம் செய்து வைத்தனர் எனக் குறிப்பிடப்படுகின்றது?

(ஆ) 'எண்ணி இருந்து அயர்வர் மங்கையர்' என்பதன் மூலம் கூறப்பட்ட விடயம் யாது?

(iv) முதல் நாளே நான் ஒரு பெரிய உண்மையைக் கண்டு பிடித்தேன். கணிப் பொறி என்பது ஒரு இராட்சச வேலைக்காரன். சொல்லும் வேலைகளை எல்லாம் கச்சிதமாகச் செய்யும். ஆனால், தவறான கட்டளைகளைப் பிறப்பித்து விட்டாலோ தானே எஜமானன் ஆகிவிடும். பிறகு நீங்கள் அதற்கு அடிமைதான். இன்னொன்று, பயந்து பயந்து இதை அணுகினால் அது எட்ட எட்டப்போய்விடும். எனது ஒன்பது வயது மகன் மீன் குஞ்சு நீந்துவதைப் போல உற்சாகமாக அதனோடு ஒட்டிப் பழகிவிட்டான். கணிப்பொறியை அவனுக்கு நிரம்பவும் பிடித்துக் கொண்டது. அதுவும் தன்னுடைய இரகசியக் கதவுகளை அவனுக்கு தங்கு தடையின்றி திறந்து விடத் தயாராகிவிட்டது.

(அ) பெரிய உண்மை எனக் கூறப்பட்ட விடயம் யாது?

(ஆ)'இரகசியக் கதவுகளை திறந்து விட்டது' என்பதன் மூலம் விளங்கிக்கொள்வது யாது?

(v) அங்கவை : தந்தையில்லை தந்தையின் தேரில்லை.. பறம்புமலையை, பறம்புமலையில் பால் வார்க்கும் நிலவை.. சங்கவை எப்படி எடுத்துச் செல்வது?

சங்கவை : பறம்புமலை மக்களின் அன்பை எப்படி விட்டுச் செல்வது? குறவர்கள்.. கானவர்கள்.. எயினர்கள்.. தந்தையின் பிரிவில் விதிர்த்துப் போய்விட்டார்கள்.

அங்கவை : முற்றுகை நடந்த போது இந்தப் பெண்கள் மலை முகட்டிலிருந்து பகைவர்களுடைய குதிரைகளை விளையாட்டாக எண்ணிக் கொண்டு இருப்பாங்க..

சங்கவை : அவ்வளவு நம்பிக்கை.. தங்கள் பாரியும்.. பறம்பும் வீழாது என்று.. கொஞ்சமும் அஞ்சாமல்…

(அ) இங்கு கையறுநிலை எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது?

(ஆ) பாரிக்கும் பறம்புமலை மக்களுக்கும் இடையேயான உறவு எவ்வாறானது?

**(20 புள்ளிகள்)**

3. **இலட்சியமும் சமநோக்கும்** எனும் கட்டுரையில்,

(அ) சிலப்பதிகாரக் காட்சி
(ஆ) கம்பராமாயணக் காட்சி
என்பவற்றின் மூலம் இலட்சிய வாழ்வு வெளிப்படுத்தப்படும் முறையினை விளக்குக.

**அல்லது**

**கம்பியூட்டர்** என்ற சிறுகதையில்,

(அ) கம்பியூட்டர் பற்றிய வர்ணனைகளும்
(ஆ) கையாளப்பட்டுள்ள இலக்கியச் சான்றுகளும்

வெளிப்படுத்தப்படும் விதத்தினைத் தெளிவுபடுத்துக.

**(15 புள்ளிகள்)**

4. **திருக்குற்றாலக் குறவஞ்சியின்** மலைவளம் கூறும் பகுதியில்
(அ) வாழ்வியல் அம்சங்களும்
(ஆ) கையாளப்பட்டுள்ள அணிகளும்

இடம்பெற்றுள்ள வகையினைத் தெளிவுபடுத்துக.

**அல்லது**

**குழந்தையென எனது மனம் குதூகலிக்கும்** என்ற கவிதையில்

(அ) இயற்கை அழகும்
(ஆ) உழவர்களின் மேன்மையும்

புலப்படுத்தப்படும் வகையினை குறிப்பிடுக.

**(15 புள்ளிகள்)**

**5,6,7** ஆகிய வினாக்களுள் ஏதாவது **ஒன்றைத்** தெரிவுசெய்து விடை எழுதுக.

5. **சங்கப்பாடல்களை** ஆதாரமாகக்கொண்டு

(அ) குறுந்தொகைப் பாடலில் தோழியின் மதிநுட்பம்
(ஆ) புறநானூற்றுப் பாடலில் மூதாளர் கூறும் இளமைக்கால நிகழ்வுகள்

என்பவற்றை விளக்குக.

**6. ‘ஆசைக்கிளியே என்ர ஆசியத்து உம்மாவே’** என்ற காதற் பாடலில்

(அ) நாட்டார் அம்சங்களும்
(ஆ) தலைவி மீது கொண்ட காதலும்
வெளிப்படும் வகையினை தெளிவுப்படுத்துக.

**7. பேதைமை** என்ற அதிகாரத்தில்,
(அ) பேதையர் அடையக்கூடிய துன்பங்கள்
(ஆ) பேதையரின் இயல்புகள்
என்பன வெளிப்படுத்தப்படும் விதத்தினை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

*****